Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 424/2019**

**Deposition of PW.2 (LW.3)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வெங்கடேசன் | ஜாதி | : | |
| த/பெ | : | பெருமாள் | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | அழகுமடை | சமயம் | : | |
| தாலுகா | : | திண்டுக்கல் மேற்கு | வயது | : | 35/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.02.2026.

(எதிரி ஆஜர் இல்லை, பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் அழகுமடையில் குடியிருந்துகொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். வாகன விபத்தில் இறந்துபோன இளம்பரிதியை எனக்கு தெரியும். கடந்த 29.05.2015 ஆம் தேதி சுமார் மாலை 05.00 மணியளவில் நான் எஸ்டேட்டிற்கு வேலைக்கு சென்றுவிட்டு வயல்காட்டு பகுதியில் நடந்து வந்து கொண்டிருந்தபோது, வாகன விபத்தில் இறந்துபோன இளம்பரிதியும், காயம்பட்ட கோவிந்தராஜ் என்பவரும்Yamaha இருசக்கர வாகனத்தில் மலை மேலிலிருந்து கீழே இறங்கிக்கொண்டிருந்தார்கள். கீழ் இருந்து மேலே சென்ற மகேந்திரா பிக்கப் நான்கு சக்கர வாகனம் எதிரே வளைவில் திரும்பும் போது இருசக்கர வாகனத்தில் வந்த இளம்பரிதி, கோவிந்தராஜ் ஆகியோர் மீது மோதி வாகன விபத்து ஏற்பட்டது. அப்போது வாகன விபத்து ஏற்பட்டதை நான் பார்த்தேன். உடனே காயம்பட்ட இளம்பரிதியை உட்கார வைத்தேன். அவருக்கு நெற்றியில் காயம் ஏற்பட்டிருந்தது. தலையின் பின்பகுதியிலும் காயம் ஏற்பட்டது. அவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். அவருடன் வந்த கோவிந்தராஜுக்கு வலது காலில் காயம் ஏற்பட்டது. மகேந்திரா பிக்கப் வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநர் விபத்து நடந்தவுடன் இறங்கி வந்து பார்த்தார். அப்போது பின்னால் வண்டி வந்ததால் அவரது பிக்கப் வாகனத்தை ஓரமாக நிறுத்திவிட்டு வருவதாக சொன்னவர் அந்த பிக்கப் வாகனத்தை எடுத்துக்கொண்டு நிற்காமல் சென்றுவிட்டார். தற்போது அந்த வாகனத்தை ஓட்டிவந்த ஓட்டுநரை விபத்து நடந்து 10 வருடங்கள் ஆகிவிட்டதால் அவரை தற்போது பார்த்தால் என்னால் அடையாளம் காண்பிக்க இயலாது. இறந்த இளம்பரிதியையும், காயம்பட்ட

கோவிந்தராஜையும் பின்னால் வந்த போக்கு வண்டியில் ஏற்றி அனுப்பி வைத்தேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் உங்களை எந்த தேதியில், எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் மறுநாள் கன்னிவாடி காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். போலிசார் விசாரணையில் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை தான் சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்தியதாக சொல்லும் வாகனத்தின் பதிவெண் உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் விசாரிக்கும்போது ராஜேந்திரன் தோட்டத்தில் நீங்கள் வேலை செய்துகொண்டிருந்ததாக சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். வயக்காடு ராஜேந்திரன் காடு தான்.

மலைப்பகுதி வளைவுகள் அதிகமாக கொண்ட மலைப்பகுதி என்றால் சரிதான். மலையில் ஏறக்கூடிய வாகனம் மெதுவாக தான் ஏற முடியும் என்றால் ரொம்ப வேகமாக செல்ல முடியாது. கீழே இறங்கும் வாகனம் வேகமாக வர வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். கோவிந்தராஜ் மற்றும் இளம்பரிதி ஆகியோர் ஒரே வாகனத்தில் வந்தார்கள் என்று தான் சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். கோவிந்தராஜும், இளம்பரிதியும் ஒரே வாகனத்தில் வரவில்லை என்றும், நீங்கள் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்பதால் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

சம்பவ இடத்தில் உங்களை தவிர வேறு யார் இருந்தார்கள் என்றால் வீரா என்பவர் இருந்தார். பிக்கப் வாகனத்தை யார் ஓட்டி வந்தார்கள் என்ற விபரம் உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். எந்த வாகனம் பின்னால் வந்ததால் எதிரி தள்ளி நிறுத்துவதாக கூறினார் என்றால் 407 வாகனம் பின்னால் வந்தது. நீங்கள் காட்டில் வேலை செய்து கொண்டிருந்ததால் சத்தம் கேட்டு தான் சென்றீர்கள் என்றால் சரிதான். நான் பார்க்கும் தூரத்தில் தான் விபத்து நடந்தது. போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor

Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 424/2019**

**Deposition of PW.3 (LW.4)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வீரா | ஜாதி | : | |
| த/பெ | : | மணி | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | அழகுமடை | சமயம் | : | |
| தாலுகா | : | திண்டுக்கல் மேற்கு | வயது | : | 31/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.02.2026.

(எதிரி ஆஜர் இல்லை, பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் அழகுமடையில் குடியிருந்துகொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். வாகன விபத்தில் இறந்துபோன இளம்பரிதியை எனக்கு தெரியும். காயம்பட்ட கோவிந்தராஜையும் எனக்கு தெரியும். கடந்த 10, 11 வருடங்களுக்கு முன்பு மாலை சுமார் 05.00 மணியளவில் நான் வேலை செய்துவிட்டு வயல்காடு பகுதியில் உள்ள வளைவில் இளம்பரிதியும், கோவிந்தராஜும் Yamaha இருசக்கர வாகனத்தில் மலை மேல் இருந்து கீழே இறங்கிக்கொண்டிருந்தார்கள். கீழ் இருந்து மேல் நோக்கி வந்த மகேந்திரா பிக்கப் வாகனம் அந்த இருசக்கர வாகனத்தில் மோதி வாகன விபத்து ஏற்பட்டது. அப்போது சம்பவத்தை நானும், வெங்கடேசனும் பார்த்துவிட்டு அங்கு சென்று கீழே இளம்பரிதி கிடந்தார். அவருக்கு தலை பகுதியில் காயம் ஏற்பட்டிருந்தது. அவரை வெங்கடேஸ் தூக்கி உட்கார வைத்தார். கோவிந்தராஜுக்கு கால்களில் காயம் ஏற்பட்டிருந்தது. அந்த வாகன விபத்தை ஏற்படுத்திய ஓட்டுநரை அன்றைய தினம் நான் பார்க்கவில்லை. அந்த பிக்கப் வாகனத்தில் சுமார் 2, 3 நபர்கள் வந்ததால் யார் வாகனத்தை ஓட்டி வந்தார்கள் என்று தெரியவில்லை. பக்கத்தில் உள்ள ஊர்க்காரர்களை நான் கூப்பிடி சென்றபோது விபத்து நடந்த இடத்தில் ஒரு போக்கு வண்டி வந்தது. அதில் ஏற்றி அவர்களை அனுப்பி வைத்தார்கள். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் உங்களை எந்த தேதியில், எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் ஞாபகமில்லை. போலிசார் விசாரணையில் முதல்

விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை தான் சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்தியதாக சொல்லும் வாகனத்தின் பதிவெண் உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் விசாரிக்கும்போது ராஜேந்திரன் தோட்டத்தில் நீங்கள் வேலை செய்துகொண்டிருந்ததாக சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான்.

மலைப்பகுதி வளைவுகள் அதிகமாக கொண்ட மலைப்பகுதி என்றால் சரிதான். மலையில் ஏறக்கூடிய வாகனம் மெதுவாக தான் ஏற முடியும் என்றால் சரிதான் . கீழே இறங்கும் வாகனம் வேகமாக வர வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். கோவிந்தராஜ் மற்றும் இளம்பரிதி ஆகியோர் ஒரே வாகனத்தில் வந்தார்கள் என்று தான் சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். கோவிந்தராஜும், இளம்பரிதியும் ஒரே வாகனத்தில் வரவில்லை என்றும், நீங்கள் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்பதால் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

சம்பவ இடத்தில் உங்களை தவிர வேறு யார் இருந்தார்கள் என்றால் வெங்கடேஷ் என்பவர் இருந்தார். பிக்கப் வாகனத்தை யார் ஓட்டி வந்தார்கள் என்ற விபரம் உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். நீங்கள் காட்டில் வேலை செய்து கொண்டிருந்ததால் சத்தம் கேட்டு தான் சென்றீர்கள் என்றால் சரிதான். வெங்கடேஷ் முன்னாடி சென்றார் அவருக்கு பின்னால் நான் சென்றேன். சத்தம் கேட்டு தான் போய் பார்த்தேன். நான் பார்க்கும் தூரத்தில் தான் விபத்து நடந்தது. போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor